# உறவுமுறையிலான சபையில் வாழ்தல், II

Translated from the original article, “living in the relational church II”

By *Wayne Jacobsen*

“சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லக்கடவோம்” (எபி. 10:24).

இந்த வசனத்தைவிட வேறு எந்த வசனமாவது அவ்வளவு தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஞாயிற்றுக்கிழமை காலையில் மக்கள் ஒரு மதரீதியான நிறுவனத்துக்குள் அணி அணியாகச் சென்று, அங்கு வரிசையாக உட்கார்ந்து, ஓர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவர்களுடைய பிரயோஜனத்துக்காக மற்றவர்கள் ஆயத்தம்பண்ணின ஒரு சொற்பொழிவைக் கேட்க வேண்டும் என்பதற்கு இந்த வசனம் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது.

அநேகரைப் பொறுத்தவரை, இந்த வசனம்தான் ஒருவன் தேவனுடைய சபையைச் சார்ந்தவனா அல்லது அவன் சுயாதீனமானவன், கலகக்காரன் என்று கருதப்படுகிறானா என்பதைத் தீர்மானிக்கிற ஒரே அளவுகோல். இது எந்த அளவுக்கு நம் மதரீதியான மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறதென்றால், வேறொன்றும் ஒரு பொருட்டாகக் கருதப்படுவதில்லை.

இப்படிப்பட்ட ஏதாவது ஒரு மதரீதியான நிறுவனத்துக்கு நீங்கள் அடிக்கடி சென்றுவந்தால் போதும் (ஒரு சில வாரங்கள்கூட போதும்), நீங்கள் ஓர் ஆரோக்கியமான விசுவாசி என்று மற்றவர்கள் நினைப்பார்கள். இல்லையென்றால், உங்களை பார்த்து அவர்கள் எச்சரிக்கையோடு தங்கள் புருவங்களை உயர்த்துவார்கள். “அவன் யார் என்று எங்களுக்குத் தெரியும்” என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய எதுவும் அவர்களுடைய வாழ்க்கையில் இல்லாவிட்டாலுங்கூட, அவன் வெறுமனே கூட்டத்துக்குப் போய் வந்தால் போதும், அவனுக்கு விசுவாசம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்த மிக ஆணவமான, சுயாதீனமான சிலர் மதரீதியான இந்த நிகழ்ச்சியில் வாராவாரம் கலந்துகொள்கிறார்கள்; அதன்பின் வெளியே போய், தங்கள் இஷ்டம்போல் வாழ்கிறார்கள்.

இவர்களைக் கொஞ்சம் அழுத்திக் கேட்டால் போதும், ஞாயிற்றுக்கிழமை கூட்டத்தில் கலந்துகொள்வதால் தாங்கள் பரலோகத்துக்குப் போய்விடப்போவதில்லை அல்லது அது வாழ்க்கையை- மாற்றுகிற ஓர் உறவை ஜீவிக்கும் தேவனோடு தங்களுக்கு ஏற்படுத்தித் தரப்போவதில்லை என்பதை அநேகர் ஒப்புக்கொள்வார்கள். இது எல்லாருக்கும் வேலைசெய்யாது என்பதை அவர்கள் ஒம்புக்கொள்கிறார்கள்; அதே நேரத்தில், கூட்டங்களில் கலந்துகொள்ளாதவர்கள் மோசமான ஆபத்தில் இருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள்.

இது எவ்வளவு சோகமானது! தேவன் சபையைப் பார்ப்பதுபோல் நாம் பார்க்கத் தவறும்போதும், சபை என்றால் என்னவென்று 2000 வருட மதரீதியான பாரம்பரியம் சொல்வதை, யோசிக்காமல் ஏற்றுக்கொள்ளும் போதும், தேவனுடைய வார்த்தையின் மிக எளிமையான, மிகச் சிறந்த சில சத்தியங்களை நாம் தவற விட்டுவிடுகிறோம். ஒருவன் வாரத் தொடக்கத்தில் காலையில் ஒரு கூட்டத்தில் உட்கார்ந்திருப்பதைவிட அதிக முக்கியமான ஒன்றைப்பற்றி எபிரேயரின் ஆசிரியர் பேசுகிறார்.

### ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்

மேலே கூறப்பட்டுள்ள பத்தி, மக்கள் ஒவ்வொரு வாரமும் திட்டமிடப்பட்ட ஓர் ‘ஆராதனையில்’ கலந்துகொள்ள வேண்டும் என்பதைக் கோருகிற நிரூபண-வசனமாக இருக்க வேண்டும் என்று ஒருபோதும் உத்தேசிக்கப்படவில்லை. ஆனால், தயவுசெய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். மற்ற விசுவாசிகளுடனான உங்கள் உறவு இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தையே சார்ந்திருந்தால், தேவன் உங்களுக்குச் செய்ய நினைத்திருக்கிற எல்லாவற்றையும் இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தின் நடுவில் நீங்கள் அனுபவித்து வளர்ந்துகொண்டிருந்தால், அதைத் தொடர்ந்து செய்யுங்கள்.

ஆனால், எழுதியவரின் மனதில் இவ்வளவுதான் இருந்தது என்று நாம் நினைத்தால், நாம் ஒரு கடுமை யான தவறைச் செய்கிறோம் என்று நான் நினைக்கிறேன். அவர் இதைவிட அதிகமான ஒன்றைம்பற்றி பேசுகிறார் என்பதற்கு நான் ஐந்து காரணங்களைப் பார்க்கிறேன்.

முதலாவது, நாம் இன்று 'சபையின் ஆராதனைகள்' என்றழைக்கிறதுபோன்ற எதுவும் ஆதி சபையில் இருக்கவில்லை. ஆம், அவர்கள் கூடிவந்தார்கள். ஆனால், பெரும்பாலும் வீடுகளில்தான் கூடி வந்தார்கள்; எப்போதாவது மட்டுமே பெரிய கூட்டமாகக் கூடிவந்தார்கள்; அப்படிக் கூடிவந்தபோது, யாராவது ஓர் அப்போஸ்தலர் அல்லது தூரத்திலிருந்து வந்த ஒரு போதகர், தேவன் யார் என்றும், அவருடன் எப்படி நடக்க வேண்டும் என்றும் அறிய அவர்களுக்கு உதவிசெய்தார்கள். ஆயினும், இந் தக் கூட்டங்கள் பெரும்பாலான இன்றைய திட்டமிடம்பட்ட கூட்டங்கள்போல் காணம்படவில்லை; இன்றைய கூட்டங்கள் பெரும்பாலும் விசுவாசிகளைத் தரிப்பிப்பதைவிட, அவர்களை மகிழ்விப்பதற் காகவே அமைக்கம்படுகின்றன.

இரண்டாவது, எபிரேயரின் ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட சூழலுக்குத் தன் கவனத்தைச் செலுத்துகிறார்; அந்தச் சூழலில் விசுவாசிகள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதில் ஈடுபடுகிறார்ககள். அவர் கள் அன்புகூரவும், நற்செயல்கள் செய்யவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்புகிறார்கள். இன்று பெரும்பாலான ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சிகளில் இது எங்கு நடக்கிறது? முன்னே இருக்கிற திறமைவாய்ந்த இசைக்கலைஞர்களிடமிருந்தும், பேச்சாளர்களிடமிருந்தும் 'ஊழியம்' பாய்ந்தோடிக் கொண்டிருக்கையில், மக்கள் மற்றவர்களுடைய தலையின் பின்பக்கத்தை மட்டுமே பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். ஆனால், இந்த வேதவாக்கியம் நேருக்கு நேர் உரையாடலும், தனிப்பட்ட ஈடுபாடும் கொண்ட வித்தியாசமான ஒரு சித்திரத்தை வழங்குகிறது.

மூன்றாவது, இதை ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும் என்று அவர் சொல்லுகிறார். வாரத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை நடக்கும் நிகழ்ச்சியில் இதை எப்படி நிறைவேற்ற முடியும்? நாம் இன்று கூடிவருகிற கூட்டங்கள்தான் அவர் கூறுவதின் பொருள் என்றால், நாம் ஒவ்வொரு நாளும் கூடிவர வேண்டியிருக்கும். நிச்சயமாக அவர் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்களைப்பற்றிப் பேசவில்லை; மாறாக, தேவனில் சேர்ந்து வாழக் கற்றுக்கொள்கிற, தங்கள் வாழ்க்கையில் ஒருவரையொருவர் சந்திக்கிற தருணத் தைக் கண்டுபிடிக்கிற விசுவாசிகளுக்கிடையில் இயல்பாக ஏற்படுகிற தொடர்பைப்பற்றிப் பேசுகிறார்.

நான்காவது, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதே கூடிவருவதற்கான முக்கியமான காரணம் என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். இன்று மதரீதியான நிறுவனங்களுக்கு நாம் போகவேண்டும் என்று பெரும்பாலானவர்கள் கூறுவதற்குக் காரணம்—உற்சாகப்படுத்துவதற்காக அல்ல, கணக் கொப்புவிப்பதற்காக. இதனால் சில வேதனையான, நாம் விரும்பாத விளைவுகள் ஏற்படக்கூடும். ஃபிலிப் யான்சி ஒரு வேசியைப்பற்றிக் கூறுகிறார்; உதவியை நாடின அவளை சபைக்கும் போவதற்கு உற்சாகப்படுத்தினார்கள். அதற்கு அவள், "நான் ஏன் அங்கு போக வேண்டும்? என்னை நினைத்து நான் ஏற்கெனவே பயங்கரமாக உணர்கிறேன். அங்கு போனால் அவர்கள் என் நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடுவார்கள்," என்று பதிலளித்தாள்.

ஆச்சரியம் என்னவென்றால், விசுவாசிகளோ அல்லது தலைவர்களோ ஒருவருக்காக ஒருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று எந்த வேத வசனமும் கோரவில்லை. அது தேவனுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும். நாம் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும் என்று கூறம்பட்டிருக்கிறது; அதின் பொருள், சில சமயங்களில் நாம் சிலரை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அல்லது கடிந்துகொள்ள வேண்டியிருக்கும். ஆனால், அதின் பொருள், ஒருவர் மற்றவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதல்ல.

கடைசியாக, ஒரு சமுதாயத்தில் உள்ள விசுவாசிகள் ஒருவரோடொருவர் தொடர்புகொள்வதை அவர் எதிர்பார்க்கிறார். நம் ஞாயிறு காலைக் கூட்டங்கள் விசுவாசிகளுக்கு இன்றியமையாதவை என்று கோருகிறார்கள்; ஆனால், அவைகள் ஒரு வட்டாரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தை அதிகமாகத் துண்டு துண் டாக்குகின்றன. தேவனுடைய பலதரப்பட்ட மக்களோடு நம்மை இணைப்பதற்குப் பதிலாக, அப்படியே நம்மைப்போல் இருக்கிற, நாம் விசுவாசிக்கிற அதே காரியங்களை விசுவாசிக்கிற மக்களோடு மட்டுமே கூடிவருவதோடு நாம் நின்றுவிடுகிறோம்.

## இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிவருதல்

எபிரேயரின் ஆசிரியர் விசுவாசிகளுக்கிடையே உறவுமுறையிலான ஒரு தொடர்பை உற்சாகப்படுத்து கிறார்; இந்தத் தொடர்பு எந்த மதரீதியான ஆராதனையும் கொடுப்பதைவிட மிக ஆழமாகச் செல்கிறது. தேவன் விசுவாசிகளுக்கிடையே கட்டுகிற உறவுகளாலான முழு இணைப்புவலையைப் பற்றியும், மற்ற வர்களை நம் வாழ்க்கைக்குள் அனுமதிப்பது எவ்வளவு முக்கியம் என்பதைப்பற்றியும் அவர் பேசுகிறார். நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவோ உதவியாக இருக்கலாமே; எனவே, தனியாக நடப்பது ஏன்?

இதற்கான காரணத்தைப்பற்றிய வெளிச்சத்தை பவுல் எபேசியர் நிருபத்தில் கூறுகிறார். தேவனுடைய முழுநிறைவு தனி விசுவாசியில் அல்ல, மாறாக முழுச் சபையில் வெளியாக்கப்படுகிறது என்று அவர் கூறுகிறார். நாமாகவே அதைப் போதுமான அளவுக்கு அறிந்துகொள்ள முடியாது அல்லது அதைப் போதுமான அளவுக்கு அறிந்துகொள்ள நம்மிடம் பலம் இல்லை. ஆனால், நாம் இதை எப்படி வாழ்ந்து காட்டுகிறோம்? ஒரு பெரிய கூட்டத்தில் வெறுமனே ஒரு பார்வையாளராக இருப்பதின்மூலமாகவா அல்லது அவருடைய ஜீவனை அறிந்துகொள்ள முயல்கிற சகபயணிகளோடு நம் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதின்மூலமாகவா?

சரீர வாழ்க்கையின் மிக வல்லமையான தருணங்கள் நூற்றுக்கணக்கானோர் கூடிவரும் கூட்டங் களில் அல்ல, மாறாக இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிவரும்போது நடக்கிறது என்று இயேசுவும்கூட தெளிவாகக் கூறினார். அங்குதான் மக்கள் யார் என்பதை அறிந்துகொள்ள முடியும், மிகவும் திக்கற்ற நிலையில் வலியோடு இருக்கும்போதும் அன்புகூர முடியும், மற்றவர்களிடத்தில் தேவனுடைய பிர சன்னத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

இந்த நூற்றாம் டில் இதற்கான மிக வல்லமையான எடுத்துக்காட்டு சீனாவில் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியின்போது நிகழ்ந்தது. அங்கு நடந்த சித்திரவதையினால், மக்கள் தலைமறைவானார்கள்; அப் போது, அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அக்கறைகொள்வதின் மகிழ்ச்சியையும், பெரிய சபைகளிலிருந்து தனிமைப்படுத்தப்படுவதின் முக்கியத்துவத்தையும், மதரீதியான பாரம்பரியங்கள், ஒரேவொரு மனிதன் வகிக்கும் தலைமைத்துவம், தேவனுக்குத் தங்களை முற்றிலும் அர்ப்பணிக்காதவர்கள் ஆகியோரிட மிருந்து விடுதலையையும் அவர்கள் கண்டுகொண்டார்கள். தேவனுடைய ஜீவன் அவர்களுக்கிடையே எப்படி வளர்ந்தது என்பது பழம்பெரும் செய்தியாகும். ஆனால், அவர்கள் அந்தக் காலத்தில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கு நாம் செவிகொடுக்கிறோமா? இல்லை! அவர்களை நம்மைப்போல் ஆக்குவதற் காக நம் கிறிஸ்தவ அமைப்புத்திட்டங்களைக் கடத்தல்செய்வதிலேயே நாம் சுறுசுறுப்பாக இருக்கிறோம்.

புதிய ஏற்பாடு இவ்வளவு தெளிவாகப் பேசுவதை அணைத்துக்கொள்ள சுற்றுச்சூழ்நிலைகள் அவர் களைப் பலவந்தம்பண்ணின. உண்மையான சரீர வாழ்க்கையை நிறுவனரீதியாக அணைத்துக் கொள்ள முடியாது. அது, பிதாவை ஏக்கத்தோடு நேசிக்கிற, மற்ற சகோதர சகோதரிகளோடு சேர்ந்து எப்படி ஒரு குடும்பமாக வாழ்வது என்று கற்றுக்கொண்டிருக்கிற, மக்களின் விளைவாகும்.

சோகமான விஷயம் என்னவென்றால், அநேக விசுவாசிகள் அம்படிம்பட்ட சரீர வாழ்க்கையை ஒருபோதும் சுவைத்ததேயில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் அணிஅணியாகச் சென்று, அங்கு நடத்தப் படும் நிகழ்ச்சியை அனுபவித்துவிட்டு, தங்கள் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப்போவதுதான் ‘சபை’ வாழ்க்கையைப்பற்றி அவர்களுடைய பார்வை; இதைவிட வேறு பெரிய பார்வை எதுவும் அவர்களிடம் இல்லை. ஆயினும், நெருக்கடி அவர்களைத் தாக்கும்போதும், தேவனுடைய ஜீவனை அவர்களுடைய சூழ்நிலைக்குப் பேசுவதற்கு நண்பர்கள் தேவைப்படும்போதும், அவர்களுக்கு அங்கு யாருமே இல்லை. அந்த நிகழ்ச்சிகளில் உட்கார்ந்து எழுந்துவந்தது, தங்கள் வாழ்க்கையின் மிக இரும் ட நாட்களைச் சந்திக்கத் தங்களைப் போதுமான அளவுக்கு ஆயத்தம்பண்ணவில்லை என்பதை அவர்கள் சீக்கிரம் கண்டுகொள்வார்கள்.

## குடும்பத்தைக் கண்டுபிடித்தல்

தேவனைம் பிதாவாக அறிதல் அவருடைய மக்களுடன் குடும்பமாக ஈடுபாடுகொள்ள நம்மை நடத்து கிறது. அந்தப் பசி உங்களில் கிழர்ந்தெழுவதை நீங்கள் உணர்கிறீர்களா? இது உலகமெங்கும் மக்க ளுக்கு நிகழ்ந்துகொண்டிருக்கிறது. நிறுவன அதிகாரத்தைப் பெற மக்கள் பயன்படுத்துகிற அரசி

யல் விளையாட்டுக்களால் வெறுப்படைந்து அல்லது “ஆராதனைகளில்” சீராட்டப்படுகிற மந்தமான சூழலில் சலிப்படைந்து, அமைம்புரீதியான மதத்தைவிட்டு விசுவாசிகள் பெரும் எண்ணிக்கையில் வெளியேறிக்கொம் டிருக்கிறார்கள்.

தேவனால் முடியாது என்று அவர்களில் அநேகர் துக்கத்தோடு கைகழுவிவிட்டார்கள் என்றும், வேறு அநேகர் மற்ற விசுவாசிகளுடன் உண்மையான சரீர வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள தாகத்தோடு இருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியும். உண்மையான சரீர வாழ்க்கையில், அவருடைய ஜீவனின் முழுச் சுதந்தரத்தில் எப்படி வாழ வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்கையில், இயேசுவே உம் மையான மையமாக இருக்கிறார். தணியாத் தாகத்தோடு இருக்கும் பலரைப்போல், தாங்கள் மெய்யாகவே எதைத் தேடிக்கொம் டிருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நம்மில் பெரும்பாலோரின் வாழ்க்கையின் பெரும்பகுதி மதத்திலேயே ஊறியிருப்பதால் வேறு எங்கே போவது என்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே, ஒரு வழியைக் கண்டுபிடிக்க நமக்கு உதவ நாம் ஒரு நிகழ்ச்சிக்காக, அல்லது ஒரு கூட்டம் மக்களுக்காக அல்லது அனுபவம்வாய்ந்த ஓர் அறிவுரையாளருக்காகக் காத்திருக்கிறோம்; ஆனால், பெரும்பாலும் இந்தத் தேடுதலில் நாம் ஏமாற்றமே அடைகிறோம்.

நான் கடைசி இதழில் சொன்னதுபோல, நிறுவனத்துக்குரிய இயக்கவிதிகளால் உண்மையாகவே குடும்ப வாழ்க்கை என்றால் என்பதின் ஒரு நிழலை மட்டுமே உருவாக்க முடியும். அதனால் நிஜத்தை வழங்க முடியாது. நாம் உறவுக்காகத்தான் பசியோடு இருக்கிறோம் என்றால், நாம் உறவுமுறையில் யோசிக்க விரும்புவோம். தேவனுக்கேற்ற ஒரு சமுதாயத்தை மனிதனின் கூர் மதியினால் அல்லது நிகழ்ச்சிநிரலால் உருவாக்க முடியாது. இது இயேசுவைப் பின்பற்றக் கற்றுக்கொள்கிற, தங்களைத் தங்களைவிடப் பெரிதான ஒன்றின் ஒரு பகுதியாகக் காண்கிற மக்களிடையே ஜீவாதாரரீதியில் எழும்புகிறது.

இவ்வாறு, பிதாவின் குடும்பத்தைக் கண்டுபிடித்தல் நம்மிடத்தில் அல்ல, மாறாகப் பிதாவினிடத்தில் ஆரம்பிக்கிறது. நீங்கள் முழு இருதயத்தோடு தேடுகிற உங்கள் தேடலில் அவர் மையப்பொருளாக இல்லையென்றால், அவர் உங்களுக்காக வைத்திருக்கிறதில் நீங்கள் நிறைய இழந்துவிடுவீர்கள். ஒரு செயல்முறைத்திட்டத்தோடு நீங்கள் ஆரம்பிக்காதீர்கள். அவரிடத்தில் ஆரம்பியுங்கள். சரீர வாழ்க்கையின் எந்த வெளியாக்கமும், நீங்கள் அவருடன் உங்கள் உறவைப் பேணிவளர்ம்பதற்கும் பதிலீடாக மாற அனுமதிக்காதீர்கள். அப்படித்தான் நாம் பெரும்பாலும் குழம்பிவிடுகிறோம். மற்றவர்களுடன் உறவுகொள்வதின்மூலம் நாம் தேவனுடன் உறவுகொள்ள நாடுகிறோம். இதற்கு எதிர்மறைதான் உண்மை. நாம் மற்றவர்களுடன் உறவுகொள்ளக் கற்றுக்கொள்கிறோம், ஆனால் முதலாவது தேவனிடத்தில் அன்புகூருகிறோம். அப்போது, உங்களைச் சுற்றியிருக்கிற குடும்பத்தில் அவர் உங்களை எம்படி வைக்கிறார் என்று உங்களால் பார்க்க முடியும். வெறுமனே ஒரு தனிக் குழுவில் மட்டும் அல்ல, உங்கள் முழு வட்டாரத்திலும் பாருங்கள். தேவனுடைய மக்கள் எங்கும் இருக்கிறார்கள். அவர் உங்களை அதில் எப்படி வைக்க விரும்புகிறார் என்பதைக் கண்டுபிடிப்பது ஒரு வழிமுறை; அதில் பின்வரும் நிலைகள் உள்ளன:

*1.தானாகவே எழுகிற ஐக்கியம்:* இந்தக் குடும்பத்தில் இணைக்கப்படுதல் பெரும்பாலும் தானாகவே எழுகிற ஐக்கியத்தில்தான் ஆரம்பிக்கிறது. தேவன் உங்களைச்சுற்றி பசியுள்ள எந்த விசுவாசிகளை வைத்திருக்கிறார்? இவர்கள் உங்களுக்குத் தெரிந்தவர்களாக இருக்கக்கூடும்; இவர்களை ஒரு நாள் மாலையில் வீட்டுக்கு அழைத்து ஐக்கியம்கொள்ளலாம் அல்லது அவர்களுடன் சேர்ந்து எப்போதாவது மதிய உணவைப் பகிர்ந்துகொள்ளலாம். நீங்கள் கடையில் சாமான் வாங்குவதற்காக வரிசையில் நின்றுகொண்டிருக்கும்போது, உங்களுக்கு அடுத்ததாக நிற்பவரும் கர்த்தரை நேசிக்கிறவர் என்று நீங்கள் கண்டுபிடிக்கிறீர்கள். இப்படிப்பட்ட எளிமையான தருணங்களிலும் ஐக்கியம் ஏற்படுகிறது.

தம் குடும்பத்தை ஒன்றாகச் சேர்க்க தேவனிடம் அநேக வழிகள் இருக்கின்றன. உங்கள் அடுத்த வீட்டில் குடிவந்திருக்கிறவரை அறிந்துகொள்ள ஆரம்பியுங்கள்; உங்கள் அலுவலகத்தில் வேலைக்குப் புதிதாகச் சேர்ந்திருப்பவரை வீட்டுக்கு வரவழையுங்கள்; அல்லது உங்கள் சமுதாயத்தில் விருப்பமுடன் தொம் டாற்ற முன்வாருங்கள்; அப்போது தேவன் உங்களருகே யாரைக் கொண்டுவருகிறார் என்று பாருங்கள். இப்படிச் செய்தால், நீங்கள் மக்களை முன்பு பார்த்த அதே விதத்தில் மீம் டும் ஒருபோதும்

பார்க்கமாட்டீர்கள் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். அவர்கள் விசுவாசிகளாக இருக்கக்கூடும்; அவர்களுடன் நீங்கள் தேவனுடைய ஜீவனைப் பகிர்ந்துகொள்ள முடியும். அல்லது அவர்கள் தேவனை அறியாதவர்களாக இருக்கக்கூடும்; அவர்களை நீங்கள் அவருடைய நாமத்தில் நேசிக்கலாம்.

எப்படியிருந்தாலும் சரி, ஐக்கியம் இப்படித்தான் ஆரம்பிக்கிறது. சந்திக்கிற மக்கள் ஒருவரைம்பற்றி ஒருவர் தெரிந்துகொள்கிறார்கள்; அப்போது அவர்கள் தங்களுக்குப் பொதுவாக தேவனுடைய ஜீவன் இருக்கிறது என்பதைக் காண்கிறார்கள். என்னுடைய பயணங்களில், ஜீவிக்கும் தேவனை அறிய வேண்டும் என்ற பசியோடு இருக்கும் மக்களை உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் நான் சந்தித்திருக்கிறேன். அவர்களுடன் ஒருவேளை சாப்பாடு சேர்ந்து சாப்பிடுகிறேன்; இதுவரை நான் சந்தித்திராத ஒருவருடைய வீட்டில் நான் தங்கியிருக்கிறேன்; இதன்மூலம் இயேசுவின்மேல் உள்ள பேரன்பைப் பகிர்ந்துகொள்கிற ம்ம் ட உறவு ஆரம்பித்திருக்கிறது.

தானாகவே எழும் ஐக்கியம் கொஞ்சம் நிலையற்றதாக இருக்க முடியும். அது ஒருவேளை சில கணங்களோ அல்லது சில நாட்களோ மட்டுமே நீடிக்கக்கூடும். ஆனால், சில சமயங்களில் அது தொடர்ந்து சென்று மிக முக்கியமானதாக மாறக்கூடும். உங்களைச் சுற்றிப் பாருங்கள். எந்த விசுவாசிகளுடன் ம்ங்கள் சரீர வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவர்கள் நீங்கள் நினைப்பதைவிட உங்களுக்கு மிக அருகாமையில் இருக்கக்கூடும்.

*2.நட்பை வளர்த்தல்:* தானாகவே எழும் இந்த ஐக்கியங்களில் சிலரோடு உங்களுக்கு ஆழமான உறவு இருப்பதாகத் தோன்றலாம். உங்கள் பயணத்தில் ஒருவருக்கொருவர் உதவ பரிசுத்த ஆவியானவர் உங்களை ஒன்றாகக் கவர்ந்து இழுத்தால் இது நடைபெறும்.

ஒன்றாகச் சேர்வதற்கு மக்கள் முயற்சி எடுப்பதால், நட்பு வளர்கிறது. அவர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் தொடர்புகொள்கிறார்கள், என்னென்ன காரியங்களைச் சேர்ந்துசெய்யலாம் என்று பார்க்கிறார்கள், அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துவிட்டுப் போகும் ஒவ்வொரு நேரமும் உற்சாகமடைவதைக் காம் கிறார்கள்.

நண்பர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் எதையும் எதிர்பார்ப்பதில்லை அல்லது அவர்கள் ஒருவரையொருவர் தங்கள் சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதில்லை. பிதாவின் நடத்துதலின்கீழ் தங்கள் பயணத்தைச் சேர்ந்து பகிர்ந்துகொள்பவர்களே நண்பர்கள். அவர்கள் ஒருவரையொருவர் கட்டுப்படுத்த விரும்புவதில்லை அல்லது ஒருவன் இன்னொருவனுடைய தேவைகளைச் சந்திக்கவில்லையென்றால் அவன் இவனைத் தூக்கியெறிந்துவிடுவதில்லை. தேவபக்திக்குரிய நட்பு என்றென்றைக்கும் ஆழமாகிக்கொண்டேபோகிற நேர்மையோடு பயணத்தைச் சேர்ந்து பகிர்ந்துகொள்ள ஆசைம்படுகிறது; இங்கு ஒருவன் முற்றிலும் உண்மையானவனாக இருக்க இன்னொருவன் அவனை எப்போதும் விடுதலைசெய்கிறான்.

பெரும்பாலும் நட்பு, கஷ்டமான நேரத்தில் ஒருவருக்கொருவர் உதவுகிற மக்களிடையே வளர்கிறது. ஒரு சிறிய இரக்கமான செயலாக ஆரம்பிக்கிற ஊழியம் எளிதில் நெருக்கமான நட்பாக மாற முடியும். இந்தக் காரணத்தினால்தான், உங்களைச் சுற்றி தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவுவதும், அவர்களுக்கு ஆதரவளிப்பதும், அவர்கள் ஒரு நெருக்கடியின்வழியாகச் செல்லும்போது உங்களால் முடிந்த உதவியைச் செய்வதும் முக்கியமாகும்.

பிதாவின் வீட்டில் நாம் மற்றவர்களுடன் வைத்திருக்கும் உண்மையான ஒவ்வொரு நட்பும் ஒரு வியத்தகு பொக்கிஷமாகும். அதை வளர்க்க நாம் செலவளிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் தகும். காலந்தவறாது அடிக்கடி சேர்ந்து இருப்பதற்கு நேரமும், சுற்றுச்சூழலும் உதவாவிட்டாலும்கூட, உம் மையான நட்பு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். ஆனால், பின்பு நீங்கள் தொடர்புகொள்ளும் போது, கடந்த முறை எங்கேவிட்டீர்களோ அங்கிருந்து ஆரம்பித்துவிடலாம்.

*3.மனமார்ந்த கூட்டுவாழ்க்கை:* நட்பு வளரும்போது, சில சமயங்களில் மக்கள் இன்னும் அதிகமாக வேண்டும் என்பதுபோல் உணர்கிறார்கள். தேவன் நம்மை சமுதாயத்திற்காகப் படைத்திருக்கிறார் என்பதை நினைவில்கொள்ளுங்கள். சிலுவையின்மூலம் நாம் பூமியிலுள்ள எல்லா விசுவாசிகளோடும்

இணைக்கப்பட்டிருந்தாலுங்கூட, ஒரு கூட்டம் நண்பர்களுடன் வெளிப்படையாகப் பயணத்தைப் பகிர்ந்துகொள்வதே அவருடைய ஜீவனை அனுபவிப்பதற்கான மிக விலையேறம்பெற்ற வழியாகும்.

ஒரு தனி நபர் அல்லது ஒரு குடும்பம் தங்கள் பயணத்தைப் பகிர்ந்துகொள்ள மற்றவர்களுடன் இணையும்போது மனமார்ந்த கூட்டுவாழ்க்கை ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவர்கள் சேர்ந்து நடக்க வேண்டும் என்று அவர்கள் உணர்கிறார்கள்; அந்தக் காலம் ஒரு சில மாதங்களாகவும் இருக்க லாம் அல்லது பல வருடங்களாகவும் இருக்கலாம். அதன்பின் அவர்கள் தங்கள் பயணத்தைச் சேர்ந்து பகிர்ந்துகொள்வதைத் தீர்மானிக்கிறார்கள்; பகிர்ந்துகொள்வதற்காகவும், ஆராதிப்பதற்காகவும், ஜெபிப் பதற்காகவும், வார்த்தையைப் படிப்பதற்காகவும் முறையாகச் சேர்ந்துவருவதாலும், வாரம் முழுவதும் ஒருவரையொருவர் தொடர்புகொண்டு வாழ்வதாலும் அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்கிறார்கள்.

சேர்ந்து தேவனுக்குச் செவிகொடுத்தல், கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரும் பிறருடைய விடுதலையைம் பாதுகாத்தல், மற்றவர்கள் தேவையோடு இருக்கும் தருணங்களில் ஒருவர் மற்றவருக்காக அக்கறைம் படுதல், தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தை விரிவாக்க தங்களை எப்படிப் பயன்படுத்த விரும்புகிறார் என்பதில் கவனமாகஇருத்தல் போன்றவை இப்படி கூடிவாழ்வதின் குறிப்பிட்ட சில குறிக்கோள்களாகும்.

ஆயினும், அது எந்த வடிவத்தில் வெளிப்படும் என்பது பெரிதும் வித்தியாசப்படலாம். நிறுவனங்களுக் குள் எழுகிற எந்த இறுக்கமும் இல்லாமல் பிணைக்கப்பட்டிருக்கிற குழுக்களைம்போல, வீட்டுச் சபை களும் இருக்கலாம். இவைகள் எந்த உடன்படிக்கையினாலோ அல்லது விசுவாசப்பிரமாணத்தினாலோ ஒன்றாகச் சேர்ந்து இருக்கவில்லை; மாறாக, வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளில் சேர்ந்திருக்க போது மான அளவுக்கு ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவருக்குமுன்ஒருவர் திறந்த வாழ்க்கை வாழவும் தீமானிப்பதின்மூலம் அவர்கள் ஒன்றாக இருக்கிறார்கள். ஒருவேளை, என்றைக்காவது ஒருநாள் இதைப் பற்றி முழுக் கட்டுரை எழுத வேண்டியிருந்தாலும், குழந்தைகள் இந்தத் சூழலுக்குள் வியத்தகு முறையில் எளிதில் பொருந்திவிடுகிறார்கள். பிதாவின் குடும்பத்தில் வாழ்நாள் முழுவதும் சாகசம் நிறைந்த வாழ்க்கை வாழ இதைவிட வேறொன்றும் அவர்களைச் சிறப்பாக ஆயத்தம்பண்ணிவிடாது.

## முதற்படி தேவைம்படுகிறது

சில சமயங்களில் இப்படிப்பட்ட குழுக்களைக் கண்டுபிடிப்பது ஏன் கஷ்டமாக இருக்கிறது? ஏனென் றால், இதில் ஒவ்வொருவரும் ஓரளவுக்கு முதற்படி எடுக்கவேண்டியிருக்கிறது; இதைத் திட்டமிடம்பட்ட அமைப்புமுறைகள் தேவனுடைய பிள்ளைகளிடமிருந்து திருடிவிட்டன. ஒன்று, எல்லாவற்றையும் மற்ற வர்கள் தங்களுக்குக் கரண்டியில் வைத்து ஊட்டுவதுபோல் ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள்; அல்லது ‘அமர்த்தப்பட்ட’ ஒரு தலைவர் இல்லாமல் தங்களால் தேவனைப் பின்பற்ற இய லாது என்று நினைக்கும் அளவுக்கு அவர்கள் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத் தில் பிதாவானவர் விரும்புகிற வாழ்க்கையின் நிறைவைக் காண அநேக விசுவாசிகளிடம் நேரமோ அல்லது சக்தியோ இல்லை.

கிறிஸ்தவர்களுடன் சேர்ந்துசெல்வதற்கு இதைவிட எளிமையான வழிகள் இருக்கின்றன. ஆனால், பிதா வின் குடும்பத்தில் வாழ்வதென்றால் என்ன பொருள் என்பதின் ஆழத்தைக் காணவேண்டுமானால் நாம் சாகவாசமாக உட்கார்ந்துகொண்டு, வேறொருவருடைய நிகழ்ச்சிநிரலுக்காக நாம் காத்திருக்க முடி யாது. அதற்குப்பதிலாக, நம்மில் இருக்கும் ஜீவன் மற்றவர்களை எந்த வழிகளில் ஆசீர்வதிக்க முடியும் என்று பார்ப்பதற்காக, தேவன் நம்மைச்சுற்றி வைத்திருக்கும் மக்களின் வாழ்க்கையில் நாம் ஈடுபாடு கொள்ள நாம் தீர்மானிக்கலாம். எந்த மக்களோடு நாம் சேர்ந்து நடக்க வேண்டும் என்பதற்கான தேவ னுடைய அழைப்பை நாம் உணர்கையில், மற்ற சகோதர சகோதரிகளின் வளஆதாரங்களோடு நம் முடையதையும் சேர்க்கலாம்; அப்போது இருண்டுகொண்டேபோகிற இந்த நாட்களில் நாம் நிற்பதற்கு இன்னும் அதிகமாகத் தரிப்பிக்கப்படுவோம்.

இதைத்தான் நீங்கள் அறிய வேண்டும் என்று எபிரேயரின் ஆசிரியர் விரும்பினார்.

இந்த நாட்களில் தேவன் இதைத்தான் மறுபடியும் கட்டிக்கொண்டிருக்கிறார். அவர் பார்ப்பது போல் அவருடைய சபையை எப்படிப் பார்க்க வேண்டும் என்று கற்றுத்தருமாறு அவரிடம் கேளுங்கள். அதன்பின், அந்த நிஜத்தின் மகிழ்ச்சியிலும், வல்லமையிலும், சுயாதீனத்திலும் வாழுங்கள்.